# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 28/2022** **நாள்: 05.02.2022**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் பதவியிடங்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளான 04.02.2022 வரை மொத்தம் 74416 வேட்பு மனுக்கள் பெறப்பட்டுள்ளன**

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், 12,838 வார்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையினை 26.01.2022 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள், 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.

மாநகராட்சி வார்டு உறுப்பினர், நகராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கான வேட்பு மனுக்கள் **28.01.2022 முதல் இறுதி நாளான** 04.02.2022 வரை பெறப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு பெறப்பட்ட வேட்பு மனுக்களின் மொத்த விபரம்

| மாநகராட்சி வார்டு உறுப்பினர் | நகராட்சி வார்டு உறுப்பினர் | பேரூராட்சி வார்டு உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|
| 14,701 | 23,354 | 36,361 | 74,416 |

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

5/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்